

# உள்ளே இருந்த எதிரி

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** 1 பேதுரு 1:4; யோசுவா 7; சங் 139:1–16; எஸ்றா 10:11; லூக் 12:15; யோசுவா 8:1–29.

**மனன வசனம்:** கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும், அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதைக் கொடுக்கும்படிக்கு, இருதயத்தை ஆராய் கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன். எரேமியா 17:10.

துயரமான ஓர் அனுபவத்தின்மூலம் உடன்படிக்கையின் நீண்ட விளைவு களையும் ஆழமான அர்த்தத்தையும் இஸ்ரவேலர் கற்ற சம்பவம் யோசுவா 7இல் முதன்முதலாக வருகிறது. உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்குக் கீழ்ப் படிவது வெற்றியைக் கொண்டுவந்தது; அதேசமயம், அதன் நிபந்தனைகளைப் புறக்கணிப்பது தோல்வியைக் கொண்டுவந்தது. இஸ்ரவேலரின் இராணுவ வெற்றி அவர்களது எண்ணிக்கை, யுத்த வியூகம் அல்லது புத்திசாலித்தனம் ஆகிய வற்றை அல்ல, அவர்களுடன் இருந்த தெய்வீக வல்லவரைச் சார்ந்திருந்தது.

வாக்குத்தத்த தேசத்தைப் பங்கிட்டுக் கொடுத்தபோது, தங்களுடைய மிக வும் ஆபத்தான எதிரி வெளியே அல்ல, தங்கள் கூட்டத்தில், தங்கள் குழுவில் இருந்ததை மிகக்கடினமான விதத்தில் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. அவர் களுக்கு முன்னிருந்த மிகப்பெரிய சவால் கானானின் அரணான பட்டணங்களோ அவர்களுடைய முற்போக்கான இராணுவ தொழில்நுட்பமோ அல்ல, தேவ னுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதில்லை என்கிற துணிகர சித்தத்துடன் அவர்களுக்குள்ளேயே இருந்த நபர்கள்தாம்.

பரலோக சுதந்தரத்திற்காக நாம் காத்திருக்கிறபோது, நாமும் இதே சவால் களை எதிர்கொள்கிறோம். 1பேதுரு 1:4; கொலோ 3:24. நாம் வாக்குத்தத்த தேசத் தின் எல்லையில் நிற்கிற வேளையில், நம் விசுவாசம் சோதிக்கப்படுகிறது, இயேசு கிறிஸ்துவிடம் நம்மை அர்ப்பணிப்பதன்மூலமாக மட்டுமே வெற்றிபெறமுடியும்.

*2025, நவம்பர் 8 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# உடன்படிக்கையை மீறுதல்

**ஆயி பட்டணத்தின் குடிமக்கள் இஸ்ரவேலரைத் தோற்கடித்ததற்கு இரண்டு முக்கியக் காரணங்கள் என்ன? யோசுவா 7.**

---

---

யாவேயின் கோபத்திற்கான காரணமும், தவறு செய்தவனுடைய பெயரும் வாசகருக்குத் தெரியலாம். எனவே, ஆகானின் மீறுதலின் மறைமுக காரணங் களைப் புரிந்துகொள்ள வாசகர்களின், யோசுவாவின், இஸ்ரவேலரின் கண் ணோட்டங்கள் உதவுகின்றன. பழைய ஏற்பாட்டின் பல அதிகாரங்களில் உள்ளதுபோல யோசுவா 7லிலும் கியாஸ அமைப்பு உள்ளது. அதிலுள்ள மைய, உச்சக்கட்டபகுதி, இஸ்ரவேலரால் ஆயி பட்டணத்தை முதல் முயற்சியில் கைப் பற்ற முடியாமல் போனதற்கான காரணங்களைக் கூறுகிறது.

ஆயி பட்டணத்தின் குடிமக்கள் இஸ்ரவேலைத் தோற்கடித்ததற்கு இரண்டு காரணங்கள் இருந்தன: ஆகானின் பாவம் மற்றும் தங்கள் சொந்தப் பெலத்தில் இஸ்ரவேலர்களுக்கிருந்த அளவுக்கு அதிகமான நம்பிக்கை. அந்த நம்பிக்கை யால்தான் ஆயி பட்டணத்தைத் தாக்குவதற்குமுன் கர்த்தருடைய சித்தத்தைக் கேட்கவில்லை; எதிரியின் படைகளை குறைத்து மதிப்பிட்டார்கள்.

தடையை மீறி நயவஞ்சகமாகச் செயல்பட்டதில் ஆகான் குற்றவாளியாக இருந்தாலும், அதற்கான பொறுப்பு ஒட்டுமொத்த தேசத்தின்மீதும் சுமத்தப்பட் டது; அவன் செயலுக்காக அவர்களும் அவதிப்பட்டார்கள். யோசு 7:1,11-13. ஆகானுடைய பாவத்தின் தீவிரத்தை அடுக்கடுக்கான வார்த்தைகளில் தேவன் குறிப்பிடுகிறார். வச 11. முதலாவது, பாவத்தை '*காற்டா*' எனும் பொதுவான வார்த்தையில் குறிப்பிடுகிறார். பிறகு, **கேம்** என்கிற வினையுரிச் சொல்லைப் பயன்படுத்தி, ஐந்து குறிப்பிட்ட பாவங்களைச் சுட்டிக்காட்டுகிறார்: 1) **அபார்**; 'மீறுதல்', 2) அழிவுக்கு (**கெரெம்**) நியமிக்கப்பட்ட பொருட்களிலிருந்து எடுத்தல் (**லகாக்**), 3) களவுசெய்தல் (**கனாப்**), 4) மேலும் வஞ்சித்தல் (**ககாஷ்**), 5) களவாடின **கெரெமை** தங்கள் உடமைகளுக்குள் வைத்தல் (**ஸிம்**).

யாவேக்கும் இஸ்ரவேலருக்கும் இடையிலான உடன்படிக்கையில் தனித் தனி நபர்களும், ஒட்டுமொத்த தேசமும் அடங்குவர். உடன்படிக்கையின்படி, அது தேவன் தெரிந்துகொண்ட தேசம் என்கிற அந்தஸ்தைப் பெற்றிருந்தது. அத னால், ஒருவரோ சிலரோ பாவம் செய்வது, அந்த ஒட்டுமொத்த உடன்படிக்கை சமுகத்தையும் பாதிக்கிறது. 'இஸ்ரவேலர் பாவஞ்செய்தார்கள்; நான் அவர் களுக்குக் கட்டளையிட்ட என் உடன்படிக்கையை மீறினார்கள்' என்று தேவன் சொன்னார். யோசுவா 7:11.

---

**சமுதாயத்தில் மோசமான நபர்களின் செயல்களால் முழுச் சமுதாயமும் எந்தெந்த வழிகளில் பாதிக்கப்படும், பாதிக்கப்பட்டிருக்கிறது? சில உதாரணங்கள் என்ன? அத்தகைய பாதிப்பின் விளைவு என்ன?**

---

# ஆகானின் பாவம்

**தேவனையும் ஆகானையும்பற்றி யோசுவா 7:16-19 சொல்வது என்ன?**

---

மீறினவன் யாரென நேரடியாகச் சொல்வதற்குப் பதிலாக, தம் நியாயமும் கிருபையும் விளங்கும்படியான ஒரு நடைமுறையை தேவன் முன்வைக்கிறார். இஸ்ரவேலரின் தோல்விக்கான காரணத்தைச் சொல்லி, அவர்களைப் பரிசுத்தப் படுத்துமாறு அழைத்துவிட்டு, அந்த நடைமுறையையும் அதன் விளைவையும் அறிவிப்பதற்குமுன் கால அவகாசம் கொடுக்கிறார்; ஆகான் யோசிக்கவும் மனந்திரும்பவும் தன் பாவத்தை அறிக்கையிடவும் அப்போது நேரம் கிடைக் கிறது. அதுபோல, அந்தக் குற்றத்தில் சம்பந்தப்படுவதா, அழிவைத் தவிர்த்த கோராகுவின் புத்திரர்போல தங்கள் அப்பாவுக்கு ஆதரவாக நில்லாமல் அந்த அழிவைத் தவிர்ப்பதா என்று அவனுடைய குடும்பத்தார் தீர்மானிக்க வேண்டி யிருந்தது (ஒருவேளை அதை அறிந்திருந்தால்). யோசு 7:13; எண் 16:23-33; எண் 26:11.

யாரால் அந்தக் குற்றம் நுழைந்து, வாதை உண்டானது என்பதைக் கண்டு பிடிப்பதே அந்த இக்கட்டிற்கான தீர்வு; ஒரு குறிப்பிட்ட கோத்திரத்தின்மீது சீட்டு விழுந்ததால், ஒட்டுமொத்த தேசம் அந்தக் குற்றத்திலிருந்து விடுவிக்கப்படுகிறது; பிறகு அந்தக் கோத்திரத்திலிருந்து குடும்பம், குடும்பத்திலிருந்து வீட்டார், வீட் டாரிலிருந்து தனிநபர்கள் என்று செல்கிறது. அந்த விசாரணயில், குற்றம் செய்தவன் காட்டப்பட்டதுடன், குற்றம் செய்யாதவர்கள் விடுவிக்கப்பட்டார்கள். அதுபோல, ஆகான் யாருக்கும் தெரியாமல் செயல்பட்டதை தேவன்தாமே சாட்சி யிடுவதும் அந்த விசாரணையில் முக்கிய அம்சமாகும்.

ஆகானே காரணமென தேவன் காட்டுகிறார். தன்னைக் கண்டுபிடிக்க வாய்ப்பே இல்லையென ஆகான் நினைத்தானோ? தேவனுடைய ஊடுருவுகிற கண்களுக்கு மறைவானது ஒன்றுமில்லை. சங் 139:1-16; 2 நாளா. 16:9. மனிதனு டைய இருதயத்தில் மறைந்திருப்பதை அவரே அறிவார். 1 சாமு 16:7; எரே 17:10; நீதி 5:21.

ஆகானை 'மகனே' என்று யோசுவா அழைக்கிறார். வயதில் முதிர்ந்தவர், தலைமைத்துவப் பதவியில் இருந்தவர் என்பதை மட்டும் இது காட்டவில்லை, மாறாக இந்த மாபெரும் வீரர் நியாயத்தை அணுகின விதத்தையும் காட்டுகிறது. குற்றம்செய்த ஆகானுக்கு தண்டனை வழங்கும்படி அவரிடம் சொல்லப்பட்டா லும்கூட, அவன்மீது மனதுருக்கத்தால் நிறைந்திருந்தார். யோசுவாவின் மன நிலை 'முரட்டுத்தனமில்லாத, தேவையில்லாமல் கடுமையான ஒரு வார்த்தைகூட பேசாத' ஒருவரின் உணர்வையும், இரக்கத்தையும், அன்பையும் காட்டுகிறது; 'அவர் (இயேசு) மாய்மாலத்தையும் அவநம்பிக்கையையும் அக்கிரமத்தையும் பயமின்றி கடிந்துகொண்டார், ஆனாலும் அவர் கடுமையாகக் கடிந்துகொண்ட போது, கண்ணீரோடு பேசினார்'1.

---

**நம்மைக்குறித்த மறைவான விஷயங்கள் உட்பட எல்லாமே தேவனுக்குத் தெரியும் என்கிற உண்மை நம் வாழ்க்கையில் என்ன தாக்கத்தை உண்டாக்குகிறது? இப்போது நாம் வாழ்கிற விதத்தில் அது என்ன தாக்கத்தை உண்டாக்கவேண்டும்?**

# கேடுவிளைவித்த தீர்மானங்கள்

**ஆகானிடம் யோசுவா என்ன செய்யச் சொல்கிறார்? யோசுவா 7:19-21. அதிலுள்ள முக்கியத்துவம் என்ன? அவனது அறிக்கையை எவ்வாறு புரிந்துகொள்ளலாம்?**

---

இரண்டு விஷயங்களைச் செய்யச் சொல்கிறார்: ஆகான் தேவனை மகிமைப்படுத்தி, அவரைக் கனப்படுத்தவேண்டும். இரண்டாவது, தான் செய்ததை மறைக்காமல் அறிக்கையிடவேண்டும். தன் செயலை தேவனிடம் மறைக்காமல், அவரை மகிமைப்படுத்த வேண்டியிருந்தது. மகிமைப்படுத்தல் என்பதற்கான எபிரெய வார்த்தை ந்டோடா; அது ஸ்தோத்தரிப்பதையும் (சங் 26:7; ஏசா 51:3; எரே 17:26), பாவத்தை அறிக்கையிடுவதையும் குறிக்கிறது. எஸ்றா 10:11.

ஆகானிடம் மெய்யான மனந்திரும்புதல் காணப்பட்டதற்கான அறிகுறி எதுவும் வேதாகமத்தில் தென்படவில்லை. கடைசி வரைக்கும் காரியம் வெளிப்படாமலேயே போகுமெனக் கருதினான். அவனது துணிகரமான மனநிலை அவனை அதிகபட்ச குற்றவாளியாக்கியது; அப்படிப்பட்டவனுக்கு மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி பாவநிவாரணமே கிடையாது. எண் 15:27-31.

யோசுவா 7:21இல் ஆகான் பேசுகிற வார்த்தைகள் ஆதாம்-ஏவாளின் விழுகையை நினைவூட்டுகிறது. ஏவாள் அந்த விருட்சம் இச்சிக்கத்தக்கது (காமத்) என்று கண்டாள் (ராஹ்); இறுதியாக அதன் கனியைப் பறித்தாள் (லகாக்ஹ்). ஆதி 3:6. கொள்ளையிலே நேர்த்தியான ஒரு பாபிலோனிய சால்வையையும், இருநூறு வெள்ளிச்சேக்கலையும், ஐம்பது சேக்கல் நிறையான ஒரு பொன்பாளத்தையும் நான் கண்டேன் (ராஹ்) என்று ஆகான் சொன்னான். பிறகு அதை இச்சித்து (காமத்), எடுத்துக்கொண்டான் (லகாக்ஹ்). ஆதாம்-ஏவாளைப்போல ஆகானின் தீர்மானத்திலும், அவநம்பிக்கை பாவம்தான் இச்சை எனும் பாவமாக வெளிப்படுவதாகத் தெரிகிறது. தேவன் தம் சிருஷ்டிகளின் நலன்களில் அக்கறைகாட்டு வதில்லை, சில பிரத்தியேக இன்பங்களை மறைக்கிறார் என்று சந்தேகிப்பதே அது.

விழுகை சமயத்தில் நடந்ததை ஒப்பிடுவதுபோக, ஆகானுக்கும் ராகாபுக்கும் இடையே நடத்தைகளில் காணப்பட்ட வித்தியாசத்தையும் அப்பகுதி வலியுறுத்துகிறது. யோசுவா 2:1-13. அவள் அந்த ஒற்றர்களை வீட்டின்மேல் ஒளித்து வைத்து, வீரர்களிடமிருந்து காப்பாற்றினாள்; ஆனால் ஆகான், தடைசெய்யப்பட்ட பொருட்களை எடுத்து, யோசுவாவிடமிருந்து ஒளித்துவைத்தான். இஸ்ரவேலின் ஒற்றர்களுக்கு இரக்கம் காட்டி, அவர்கள் வெற்றிபெற அவள் உதவினாள்; இவன் தன் பேராசையால் இஸ்ரவேலுக்கு இக்கட்டை வருவித்து, அவர்கள் தோல்வியடையச் செய்தான். அவள் இஸ்ரவேலர்களுடன் உடன்படிக்கை செய்தாள்; இவன் யாவேயுடன் உடன்படிக்கையை முறித்தான். ராகாப் தன்னையும் தன் குடும்பத்தையும் காப்பாற்றினாள்; அவர்கள் இஸ்ரவேலின் மதிப்புமிக்க குடிமக்களானார்கள்; ஆகான் தன்னையும் தன் குடும்பத்தையும் அழிவுக்கு ஆளாக்கி, அவமானத்திற்கு முன்னுதாரணமானான்.

---

**இச்சை எனும் பாவம்பற்றி யோசியுங்கள். நம்மிடம் இருக்கிறதோ இல்லையோ அந்தப் பாவத்தில் நாம் விழாமல் எவ்வாறு தப்பித்துக்கொள்ளலாம்? லூக் 12:15.**

# நம்பிக்கையின் கதவு

**நம்முடைய மிகமோசமான தோல்விகளைக்கூட வாய்ப்புகளாக தேவனால் மாற்ற முடியும் என்பதுபற்றி யோசுவா 8:1-29 சொல்வது என்ன?**

---

யாவேயின் யுத்தி இஸ்ரவேலரின் ஆரம்பத் தோல்வியை வெற்றியாக்கி, ஆகோரின் பள்ளத்தாக்கை (ஆகோர் என்றால் 'பிரச்சினை') நம்பிக்கையின் வாசலாக மாற்றுகிறது. ஒப்பிடவும் ஓசியா 2:15. இஸ்ரவேலர்களுக்கு எதிராக ஆரம்பத்தில் கிடைத்த வெற்றியால் அளவுக்கு அதிகமான சுயநம்பிக்கை அடைந்த ஆயி பட்டணத்தின் குடிமக்கள், அதே உத்தியுடன் தாக்குவதற்காகப் புறப்பட, இஸ்ரவேலர்கள் பயந்து, பின்வாங்குவதுபோல நடிக்கிறார்கள். ஆயி மனுஷர் அப்பட்டணத்தின் அரண்களை விட்டு வெளியே வந்ததும், பட்டணத்தின் அருகிலேயே பதுங்கியிருந்த 30,000 இஸ்ரவேலர்களும், காலியான அந்தப் பட்டணத்தைக் கைப்பற்றி, கொளுத்தி விடுகிறார்கள். யோசு 8:4. அந்த உத்தியல்ல, தேவனே வெற்றியளித்து, ஆயி பட்டணத்தை இஸ்ரவேலரிடம் கொடுப்பாரென யோசுவா 8:7 சொல்கிறது. அந்தப் புத்தகத்தின் வேறு எந்த அதிகாரத்தையும்விட இங்கு இராணுவ அம்சங்கள் அதிகமிருந்தாலும்கூட, அந்த வெற்றி யாவேயால் கிடைத்த பரிசு என்பதைச் சுட்டிக்காட்ட வசனம் மறக்கவில்லை.

ஆயி பட்டணத்தார் வெளியே வந்து, இஸ்ரவேலரைத் துரத்தின சமயம்தான் அந்தப் போரின் முக்கியத் தருணமாக இருந்தது. யோசுவா 8:2இல் போர் உத்திகுறித்து சொன்ன தேவன், இப்போது இரண்டாவது முறையாகப் பேசுகிறார். அவரது தலைமையில் அந்த யுத்தம் நடந்ததை அது காட்டுகிறது. அத்தருணம்வரை, யுத்தத்தின் முடிவு எப்படி இருக்குமென நமக்குத் தெரியாது. அதற்கு பிறகு, இஸ்ரவேலரின் வெற்றி உறுதியானது தெரிகிறது.

யோசுவா தன் கையில் வைத்திருந்தது ஈட்டியோ பட்டயமோ அல்ல, ஒரு கொடுவாள். யோசுவாவின் காலத்தில் அது ஆயுதமாக அல்ல, அரச அதிகாரத்தின் அடையாளமாகப் பயன்படுத்தப்பட்டது. தாக்கும்படி சமிக்ஞை கொடுக்க மட்டுமல்ல, ஆயி பட்டணத்தின் தோல்வியில் தேவனே அரசராக இருந்ததையும் அது காட்டுகிறது. முழு வெற்றி கிடைக்கிற வரையிலும் யோசுவா கொடுவாளை நீட்டிக்கொண்டே இருந்தார்; சிவந்த சமுத்திரத்தைக் கடக்கிற போதும், யோசுவா தலைமைதாங்கின அமலேக்கியருக்கு எதிரான போரின்போதும், மோசேயிடம் காணப்பட்ட தலைமைத்துவக் கடமையை இப்போது யோசுவா முற்றிலும் ஏற்றிருந்ததை அது காட்டுகிறது. யாத் 14:16; 17:11-13.

இந்த முறை தேவன் கண்காணும் வகையில் அல்லது அற்புதவிதமாகத் தலையிடவில்லை; ஆனால் முதல் தலைமுறையில் எகிப்தியருக்கு எதிராகவும், பின்னர் எரிகோவுக்கு எதிராகவும் கிடைத்த வெற்றிபோலவே ஆயி பட்டணத்தின் மீதான வெற்றியும் தேவனால்தாம் சாத்தியமாகியது. தேவனுடைய வார்த்தையில் யோசுவாவுக்கு இருந்த விசுவாசமும், அதற்கு சற்றும் விலகாத கீழ்ப்படிதலும்தான் வெற்றிக்கு முக்கியக் காரணமாக இருந்தது. இந்தச் சம்பவத்தின் நியதி, இன்று பல இடங்களில் வசிக்கிற, பல சவால்களை எதிர்கொள்கிற தேவக்களுக்கும் பொருந்தும்.

# தேவ வல்லமைக்கு ஒரு சாட்சி

அஞ்ஞான தேசங்கள் தம்மை அறியவும், தங்கள் தீய வழிகளிலிருந்து திரும்பவும் தேவன் ஒரு வாய்ப்பளித்தாரெனப் பார்த்தோம். (பாடம் 5). ஆனாலும் அவர்கள் மறுத்தார்கள்; இறுதியில் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு ஆளானார்கள்.

**தங்களுக்கு அழிவு நேரிட்டதும் யோசுவா செய்ததை யோசுவா 7:6-9இல் பார்க்கலாம். குறிப்பாக 7:9இல், அவர் பேசுகிற வார்த்தைகளில் உள்ள முக்கிய இறையியல் நியதி என்ன?**

எகிப்திலிருந்து புறப்பட்ட பிறகு, கஷ்டங்கள் வந்ததும் இஸ்ரவேல் மக்கள் பேசினதுபோலவே யோசுவா பேசுவதுபோல் முதலில் தெரியலாம்: 'நாங்கள் இறைச்சிப் பாத்திரங்களண்டையிலே உட்கார்ந்து அப்பத்தைத் திருப்தியாகச் சாப்பிட்ட எகிப்துதேசத்திலே, கர்த்தரின் கையால் செத்துப்போனோமானால் தாவிளை; இந்தக் கூட்டம் முழுவதையும் பட்டினியினால் கொல்லும்படி நீங்கள் எங்களைப் புறப்படப்பண்ணி, இந்த வனாந்தரத்திலே அழைத்துவந்தீர்களே.' யாத் 16:3.

யோசுவா இங்கே, 'ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, எங்களை அழிக்கும்படிக்கு எமோரியர் கைகளில் ஒப்புக்கொடுப்பதற்காகவா தேவரீர் இந்த ஜனத்தை யோர்தானைக் கடக்கப்பண்ணினீர்? நாங்கள் யோர்தானுக்கு அப்புறத்தில் மனத்திருப்தியாக இருந்துவிட்டோமானால் நலமாயிருக்கும்' என்கிறார். யோசுவா 7:7.

ஆனாலும், இந்தத் தோல்வியால் தேவனுடைய நாமத்திற்கும் புகழுக்கும் பாதிப்பு ஏற்படுமென தான் கவலைப்படுவதைக் காட்டுகிறார். 'கானானியரும் தேசத்துக் குடிகள் யாவரும் இதைக்கேட்டு, எங்களை வளைந்துகொண்டு, எங்கள் பேரை பூமியிலிராதபடிக்கு வேரற்றுப்போகப் பண்ணுவார்களே; அப்பொழுது உமது மகத்தான நாமத்துக்கு என்ன செய்வீர்?' யோசுவா 7:9.

இஸ்ரவேலைக்குறித்த தேவநோக்கத்தின் ஒரு கருத்தையும் நியதியையும் இது வெளிப்படுத்துகிறது. தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு தம்மால் செய்யக்கூடிய மகத்தான காரியங்களை சுற்றிலுமிருந்த அஞ்ஞான தேசங்கள் காண அவர் விரும்பினார்; அப்போது, தமது மக்களின் வெற்றியின்மூலமும் இஸ்ரவேலின் தேவனைப்பற்றி ராகாபைப்போல அவர்கள் அறிந்துகொள்ள முடியும். மறுபுறத்தில், இஸ்ரவேலருக்கு தோல்விகிடைத்தால், இஸ்ரவேலின் தேவன் பெலனற்றவர், பயனற்றவர் என்று பிற தேசத்தார் கருதக்கூடும். எண் 14:16; உபா 9:28. அது கானானியரின் மனக்கடினத்தை மேலும் துணிகரமாக்கும்.

அதாவது, எபிரெயர்கள் தேசத்தைப் பிடிப்பதிலும்கூட தேவனுக்கு மகிமையும் கனமும் கொண்டுவருவது சம்பந்தப்பட்ட பெரிய விஷயங்களும் நியதிகளும் சம்பந்தப்பட்டிருந்தன; அவர்மட்டுமே அஞ்ஞானிகளுக்கும் இஸ்ரவேலுக்கும் ஒரே நம்பிக்கையாக இருந்தார்.

---

**இஸ்ரவேலர் உலகத்திற்குச் சாட்சிபகர அழைக்கப்பட்டிருந்தார்கள்; இன்றைய ஏழாம் நாள் அட்வென்டிஸ்டுகளாகிய நாமும் சாட்சிபகர அழைக்கப்பட்டுள்ளோம், இரண்டுக்கும் இடையே எந்தெந்த வழிகளில் ஒற்றுமைகளைக் காணமுடிகிறது?**

# மேலும் படிக்க:

'இச்சையை வேராகக் கொண்டிருந்த பாவம்தான் ஆகானின் அழிவுக்கு வழிநடத்தியது, அது எல்லா பாவங்களிலும் வெகுசாதாரணமாக, மிகவும் அற்பமாகக் கருதப்படுகிற பாவமாகும்.

'ஆகான் தன் குற்றத்தை ஒத்துக்கொண்டான்; ஆனால் தனக்கு நன்மை உண்டாக முடியாத அளவுக்கு காலந்தாழ்ந்த செயல். இஸ்ரவேலின் படைகள் ஆயி பட்டணத்தால் தோற்கடிக்கப்பட்டு, சோர்ந்துபோய் வருவதைக் கண்டான்; ஆனாலும் முன்வந்து, தன் பாவத்தை அறிக்கையிடவில்லை. விவரிக்கமுடியாத துக்கத்தால் யோசுவாவும் இஸ்ரவேலின் மூப்பர்களும்தரையில்விழுந்துகிடந்ததைப்பார்த்தான். அப்போது அவன் அறிக்கையிட்டிருந்தால், அது கொஞ்சமாவது மெய்யான மனமாற்றத்திற்கான ஆதாரமாக இருந்திருக்கும்; ஆனாலும் அமைதியாகவே இருந்தான். மிகப்பெரிய குற்றம் நிகழ்ந்துவிட்ட பேச்சுகளைக் கேட்டான், அது எப்படிப்பட்ட தன்மையுடையது என்பதும் அவன் காதில் விழுந்தது. ஆனால் வாயைத் திறக்கவில்லை. பிறகுதான், முறையான விசாரணை துவங்கியது. தன் கோத்திரம், குடும்பம், வீட்டார் பெயரில் சீட்டு விழுந்தபோது, அவனது ஆத்துமா பயத்தால் சிலிர்த்தது! ஆனாலும் தேவன் தன்னைச் சுட்டிக்காட்டுகிறவரையிலும் அறிக்கையிடவில்லை. பிறகு, தன் பாவத்தை இனியும் மறைக்கமுடியாது என்று தெரிந்ததும், உண்மையை ஒத்துக்கொண்டான். பெரும்பாலும் இவ்வாறுதான் அறிக்கையிடுகிறார்கள். நிரூபிக்கப்பட்ட பிறகு உண்மைகளை ஒத்துக்கொள்வதற்கும், நமக்கும் தேவனுக்கும்மட்டுமே தெரிந்த நிலையில் பாவங்களை அறிக்கையிடுவதற்கும் மிகப்பெரிய வித்தியாசம் உள்ளது. தான் அறிக்கையிடுவதால் தனது குற்றத்தின் விளைவுகளைத் தவிர்க்கலாம் என்று நம்பாதிருந்த ஆகான் தன் பாவத்தை அறிக்கையிட விரும்பவில்லை. பாவத்திற்கான மெய்யான மனந்திரும்புதலும், மன நொறுங்குதலும், நோக்கத்தில் மாற்றமும், தீமைமீதான அருவருப்பும் காணப்படவில்லை'.

---

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *விளம்பரங்களும் மிகைநுகர்ப்போக்கும் அதிகரித்துள்ள ஓர் உலகத்தில் பத்தாவது கற்பனை எவ்வாறெல்லாம் பொருந்தும்? யாத் 20:17. தேவைக்கும் விருப்பத்திற்கும் இடையே உள்ள வித்தியாசத்தை நடைமுறைரீதியாக எவ்வாறு அறியலாம்? அந்த வித்தியாசம் ஏன் முக்கியமானது?*

2. *தானி 9:4-19இல் தானியேலின் ஜெபத்தை வாசியுங்கள். இஸ்ரவேலரின் பாவத்தை அறிக்கையிட்டபோது, 'நாங்கள்' இன்னென்ன மோசமான காரியங்களைச் செய்தோம் என்று தானியேல் அடிக்கடி கூறுகிறார்; தானியேல் தீமை செய்ததாக எந்தப் பதிவும் இல்லாத நிலையில், அவரது வார்த்தைகளின் முக்கியத்துவம் என்ன?*

3. *வியாழக்கிழமை பாடத்தின் கடைசியிலுள்ள கேள்விபற்றி யோசியுங்கள். இஸ்ரவேலர் சாட்சியிடுவதற்கு அனைத்து 'கற்பனைகளுக்கும் கட்டளைகளுக்கும்' அவர்கள் கீழ்ப்படிவது ஏன் முக்கியமாக இருந்தது? இதே நியதி இன்று நம் சபைக்கு எவ்வாறு பொருந்துகிறது? அதாவது, தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற அனைத்திற்கும் நாம் கீழ்ப்படிந்தால், நம் சாட்சி எவ்வாறு அதிக பயனுள்ளதாக இருக்கும்?*

# தசமபாகம் கொடுத்தல்: பகுதி 1

**ஆண்ட்ரூ மெக்செஸ்னீ**

நமிபியாவில் புதிதாக ஒரு வீட்டில் குடியேறினார் ஃப்ராங் முகுபெ. வீட்டிற்கு தேவையான கட்டில், மெத்தை, அடுப்பு, வானொலி, தொலைக்காட்சி பெட்டி, ஜமக்காளம், பானைகள் ஆகியவற்றை கடனுக்கு வாங்கியிருந்ததால், கையில் பணம் இல்லை.

ஆனால் அப்படி நடக்குமென அவர் எதிர்பார்க்கவில்லை. ஃப்ராங் கணக்கியல் ஆசிரியராகப் பணியாற்றி வந்தார், கணக்குப்போட்டுச் செலவழித்தார். முதலில், தசமபாகம், காணிக்கை கொடுப்பதிலும், கடன்களை அடைப்பதிலும் சிக்கல் ஏற்படவே இல்லை. பிறகு, எதிர்பாராத செலவுகள் வந்தன. பணப்பற்றாக்குறை உண்டானது, தசமபாகம், காணிக்கை கொடுப்பதை நிறுத்தினார். என்ன செய்வதெனத் தெரியவில்லை. ஜெபித்தார். கடனை அடைக்க இரண்டு வருடங்கள் ஆயின. பிறகு, மல்கியா 3:8,9 சொல்கிற வார்த்தைகளை வாசித்தார். இரண்டு வருடங்கள் கடந்தன. கடனை அடைக்கிற வரையிலும் ஃப்ராங்கிற்கு போதும் போதுமென ஆகிவிட்டது. சந்தோஷமடைவதற்கு பதிலாக அதிக கவலையாக இருந்தது. கடனுக்கு வாங்கின அனைத்தையும் திரும்பக் கொடுத்து விடத் தீர்மானித்தார். அதை முதன்முலாக அறிந்தவர், அவர் வேலைசெய்த நிறுவனத்தின் முதல்வர்தான். "எனக்கு கொஞ்ச நேரம் வெளியே செல்ல அனுமதிவேண்டும். நான் என் பொருட்களை எல்லாம் திரும்பக் கொடுக்கவேண்டும்" என்று அனுமதி கேட்டார்.

"ஏன் கடனை அடைக்கவில்லையா?" என்று முதலாளி கேட்டார்.

"கடனை அடைத்துவிட்டேன், ஆனால் பொருட்களை எல்லாம் திரும்பக் கொடுக்க ஆசைப்படுகிறேன்" என்று ஃப்ராங் சொன்னார்.

'ஏன்?"

"தேவனுக்கு உரியதை நான் அவருக்குக் கொடுக்காததால், அவை எனக்கும் அவருக்கும் இடையே தடையாக உள்ளன" என்று சொன்னார்.


அவரை பரியாசம்பண்ணும் வகையில் முதல்வர் சிரித்தார்.

ஃப்ராங் தன் வாடகை வீட்டிற்குச் சென்று, தன்னுடன் குடியிருக்கும்படி வந்திருந்த தன் சகோதரனிடம் தன் முடிவைக் கூறினார். அவரும் ஃப்ராங்கிடம் கேள்வி எழுப்பினார்.

"சபிக்கப்பட்ட பொருட்களுடன் தூங்காமல் இருப்பது நல்லது. இவற்றிற்குச் செலவழிப்பதற்கு தேவனுக்குரிய பணத்தை எடுத்துவிட்டேன்" என்று சொன்னார்.

பிறகு கடைக்குச் சென்று, கடை மேலாளரிடம் பேசினார். அந்தப் பொருட்களுக்கு பணம் செலுத்தப்பட்டதை மேலாளர் கனிணியில் பார்த்தார்.

"நீங்கள் சுயநினைவோடுதான் பேசுகிறீர்களா?" என்று முதலாளி கேட்டார்.



தனக்கு பிரச்சினை எதுவுமில்லையென ஃப்ராங் சொன்னார். "ஆனால் இவற்றை திரும்ப உங்களிடம் வாங்கமுடியாது" என்று மேலாளர் கூறினார். ஃப்ராங் கவலைப்படவில்லை. பிறகு மேலாளர் ஒரு ஆவணத்தை அச்செடுத்தார். அதில், எந்த நஷ்ட ஈடும் எதிர்பார்க்காமல், அந்தப் பொருட்களை எல்லாம் திரும்பக் கொடுப்பதாக எழுதியிருந்தது. அதில் கையொப்பமிடச் சொன்னார்.

***மீதி சம்பவத்தை அடுத்த வாரம் வாசிக்கவும்.***